# முதலீட்டில் சாதித்த அரசு துறை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முதல்வர் பாராட்டு

புதுச்சேரி, அக்.31-
மாநில சிறுசேமிப்பு திட்டத்தில் அதிக முதலீடு செய்து சாதனை படைத்த அரசு துறை, கல்வி நிறுவனம் மற்றும் முகவர்களுக்கு, முதல்வர் ரங்கசாமி சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

புதுச்சேரி திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை, அஞ்சலக துறையுடன் கைகோர்த்து மாநிலத்தில் சிறுசேமிப்பு திட்டத்தை செயல்படுத்தி சேமிக்கும் ஆர்வத்தை விதைத்து வருகிறது. இந்த திட்டத்தில் பள்ளி மாணவர்கள், முதியோர், நடுத்தர வர்க்கத்தினர் அதிக எண்ணிக்கையில் கணக்கு துவங்கி சேமித்து வருகின்றனர்.

புதுச்சேரி மாநிலத்தின் சேமிப்பு கடந்த 2008 -09 ஆண்டு 102.42 கோடி ரூபாயாகவும், 2009 -10ல் 203.88 கோடியாகவும் உயர்ந்திருந்தது. ஆனால் கடந்தாண்டு மாநிலத்தின் சிறுசேமிப்பு திடீரென 190.74 கோடி ரூபாயாக சரிந்தது. இந்தாண்டு மே மாதம் வரை 17.27 கோடி ரூபாய் மட்டுமே சேமிப்பு ஈட்டப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பு திட்டத்தில் அதிக முதலீட்டினை செய்து சுகாதார துறை முதல் பரிசு வென்றது. வணிக வரித் துறை இரண்டாம் இடம், கூட்டுறவு துறை மூன்றாம் இடம், பொதுப்பணித் துறை நான்காம் இடம் பிடித்துள்ளன. கல்வி நிறுவனங்களில் நாவலர் நெடுஞ்செழியன் அரசு மேல்நிலைப் பள்ளி, வெங்கடசுப்பா ரெட்டியார் அரசு தொழில்நுட்ப பள்ளி இரண்டாம் இடமும் பிடித்தன.

வேளாண் துறை, கால்நடை பராமரிப்பு, பள்ளி கல்வித் துறை, கணக்கு மற்றும் கருவூலக துறை, கல்வி நிறுவனங்களில் வ.உ.சி., அரசு மேல்நிலைப்பள்ளி பாராட்டு சான்றிதழ் தகுதியை அடைந்தன. நிலையான திட்டத்தில் 13.88 கோடி ரூபாய் ஈட்டிய முகவர் உதயகுமார் முதலிடம் பிடித்தார். ரமேஷ்பாபு 13.10 கோடி ஈட்டி இரண்டாம் இடம், மூர்த்தி 10.55 கோடி ரூபாய் ஈட்டி மூன்றாம் இடம் பிடித்தனர்.

சேமநல நிதித் திட்டத்தில் முகவர் அனந்தராமன் 1.60 கோடி ரூபாய் ஈட்டி முதலிடம் பிடித்தார். ரவிச்சந்திரன் 78.50 லட்சம் ரூபாய் ஈட்டி இரண்டாம் இடம், வெங்கடேசன் 76.26 லட்சம் ரூபாய் ஈட்டி மூன்றாம் இடம் பிடித்தார்.

மகளிர் திட்ட சேமிப்பில் முகவர் வித்யாலட்சுமி 1.46 கோடி ரூபாய் ஈட்டி முதலிடம் பிடித்தார். தவமணி 67.93 லட்சம் ரூபாய் ஈட்டி இரண்டாம் இடம், பத்மாவதி 65.76 லட்சம் ரூபாய் ஈட்டி மூன்றாம் இடம் பிடித்தனர். சிறுசேமிப்பு திட்டத்தில் அதிக முதலீட்டினை செய்து சாதனை படைத்த துறை, கல்வி நிறுவனம், முகவர்களுக்கு பாராட்டு விழா திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை அலுவலகத்தில் நேற்று நடந்தது. முதல்வர் ரங்கசாமி பரிசு கேடயம், சான்றிதழ் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் திட்டம் மற்றும் ஆராய்ச்சி துறை இயக்குனர் கனகசபை, அஞ்சலக முதுநிலை கண்காணிப்பாளர் இன்பழகன், துணை இயக்குனர் அசோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி திட்ட மற்றும் ஆராய்ச்சி துறை அலுவலகத்தில் நடந்த உலக சிக்கன நாள் விழாவில் சிறு சேமிப்பு திட்டத்தில் அதிக முதலீட்டினை செய்து சாதனை படைத்த துறை, முகவர்களுக்கு முதல்வர் ரங்கசாமி சுழற்கேடயம், பாராட்டு சான்றிதழ் வழங்கினார். அருகில் திட்ட ஆராய்ச்சி துறை இயக்குனர் கனகசபை, அஞ்சலக முதுநிலை கண்காணிப்பாளர் இன்பழகன்.